**மாத்தறை மாநகர சபை - 2022**
**--------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மாத்தறை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, மாத்தறை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு உள்ளூராட்சிச் சேவை பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 48,734,760 இற்கான தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு இறுதியளவிலும் வழங்குனர்களிடம் பெற்றுக்கொண்டிருக்காத மின்பிறப்பாக்கியொன்றிற்காக ரூபா 5,000,000 இற்கான பலவின கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு பெற வேண்டிய வாடகை வருமான மீதி ரூபா 70,953,172 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பரிசோதனை மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 04 வருமானத் தலைப்புக்களிலிருந்து பெறவேண்டிய ரூபா 5,674,588 இற்கான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது 02 வருமானத் தலைப்புகளில் இருந்து கிடைத்திருந்த ரூபா 889,239 இற்கான வருமானம் | குப்பைவரி வருமானம் - கட்டுப்பாட்டுக் கணக்கொன்று இன்மையால் ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்பட்டதென. | |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டண தேறிய வருமானம் ரூபா 5,471,640 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியளவில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 461,248 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 462,528 இற்கான பலவினச் செலவுகளுக்காக பலவினக் கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | பிரயாணச் செலவுகள், நிலுவை மேலதிக நேரக் கொடுப்பனவு, நாளிதழ் பில் பத்திரங்கள் மற்றும் விளைச்சல் வரி தவிர ஏனைய விடயங்களுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கையிறுப்பு தேரிய மீதி ரூபா 13,531,056 இனால் மிகையாக கணக்கீடு செய்யபப்பட்டிருந்து. | 2023 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 1995 ஆண்டின் போது நகர சபைக்கு வழங்கியிருந்த ரூபா 89,374,000 இற்கான கடன் தொகைக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன்தொகை மற்றும் வட்டி ரூபா 99,052,161 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட தரப்பினரார் நிச்சயிக்கப்பட்ட பதிலொன்று வழங்கியிருக்கப்படாமையால் இந்தத் தொகை கணக்கீடு செய்யப்படவில்லை என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையினால் பல்வேறு வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது செலுத்தப்பட்ட ரூபா 3,096,925 இற்கான பெறுமதிகூட்டிய வரி மற்றும் சேகரிக்கப்பட்ட பெறுமதி கூட்டியவரி ரூபா 2,582,737 இற்கான சீராக்கல் மேற்கொண்ட பின்னர் ரூபா 514,188 தொகைக்கான மீதி நடைமுறை சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், ரூபா 2,582,737 தொகைக்கான சேகரிக்கப்பட்ட பெறுமதிகூட்டிய வரி பொது வைப்புக்களின் கீழ் நடைமுறை பொறுப்பு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டின் போது களஞ்சியக் கடன் கொடுத்தோரிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,397,111 தொகைக்கான கொடுப்பனவு களஞ்சிய கடன் கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் களஞ்சிய முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி மற்றும் களஞ்சிய முற்பணக் கணக்கு மீதி அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மாதாந்த செலவு பொழிப்பில் உள்ளடக்கப்பட்ட 02 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 2,795,571 தொகை மிகையாகவும், 03 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 3,992,542 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலவுப் பகுப்பாய்வினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் போது சமூக அபிவிருத்திப் பிரிவின் மூலம் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 02 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து சேமிக்கப்பட்டிருந்த ரூபா 123,579 தொகை பலவினக் கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டு இறுதியளவில் கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 1,126,923 இற்கான 11 நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதிகள் நிர்மாண வேலை கடன் கொடுத்தோரின் கீழ் தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தமையால் நிர்மாணவேலைக் கடன்கொடுத்தோர் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இந்த மீதிகள் கடன்கொடுத்தோர் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ங) | மீளாய்வாண்டு இறுதியளவில் 07 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 665,206 தொகைக்காக நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | அந்த நிர்மாண வேலைகளை எதிர்காலத்தில் பதிவேட்டில் உட்படுத்தப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ச) | நிலையான சொத்துக்கள் தன்மையல்லாத ரூபா 1,037,612 தொகை பெறுமதியான பொருட் பதிவேட்டு மற்றும் நுகர்வுத் தன்மையுள்ள 1474 பண்ட விடயங்கள் | 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஞ) | மீளாய்வாண்டு இறுதியளவில் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியின் தேறிய பெறுமதி ரூபா 7,040,291 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் தொகையின் மீது கடன்கொடுத்தோர் ஏற்பாடு மெற்கொள்ளப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி மாற்றமடையலாம் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ட) | மீளாய்வாண்டு இறுதியளவில் நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 5,353,403 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ண) | மீளாய்வாண்டின் போது 04 நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதிகளுக்காக கிடைத்திருந்த ரூபா 1,683,220 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (த) | சபையினால் 03 வங்கிகளில் பேணப்பட்டு வந்திருந்த 38 நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய வட்டி ரூபா 1,660,947 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 21,247,120.09 இற்கான தொகை மற்றும் 2022 ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 20,562,772.12 இற்கான வட்டித்தொகையும் கணக்கீடு செய்யப்பட்டதென. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 496,572,529 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 10,186,555 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 568,364,209 தொகைக்கான 19 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியவில்லை. | நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 104(3) மற்றும் நி.பி. 104(4) | சபைக்குச் சொந்தமான டிமோ பட்டா வண்டிக்கு மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக 2023 மே 02 திகதி அளவிலும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 103(4) | மாத்தறை மாநகர சபையின் தீ அணைக்கும் அலகிற்கு சொந்தமான பேரிடர் தலையீட்டு வாகனத்தின் சாரதியாக சேவையாற்றிய குறித்த தீயணைப்பு வீரர் ஒருவரினால் எஞ்சினின் வெப்ப நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஓட்டம் மேற்கொண்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பாக கணக்காய்வுத் திகதியாகிய 2023 மே 02 திகதி அளவிலும் விசாரணைகள் மேற்கொண்டு நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், குறிப்பிட்ட வாகனத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் தனியார் கராஜ் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | (iii) நி.பி. 371(5) | மூன்று உத்தியோகத்தர்களினால் 06 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 63,636 இற்கான முற்பணங்களை தீர்ப்பதற்கு 05 நாட்கள் முதல் 28 நாட்கள் வரை கால தாமதம் | விடய உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கைக் கடிதம், அறிவுரைக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது எனவும், பதிவேடொன்று பேணிச் செல்வதற்காக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | |
| | (iv) நி.பி. 571 | 2000 ஆண்டு முதல் வைப்புச் செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 6,964,085 தொகைக்கான பலவின வைப்புக்களின் மீதிகள் ரூபா 5,152 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | பல்வேறு கருமங்களுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,522,241 தொகைக்கான முற்பண மீதி மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி பில்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் முற்பணம் தீர்க்கப்படவில்லை என. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 162,479,763 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 142,443,317 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 36,726,576 | 42,135,018 | 36,096,681 | 67,044,179 | 39,098,558 | 35,760,433 | 30,146,775 | 61,005,842 |
| வாடகை | 28,469,950 | 29,152,465 | 13,395,072 | 90,579,394 | 35,092,100 | 29,446,071 | 18,380,835 | 74,822,001 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 25,241,000 | 23,045,801 | 36,629,472 | 11,790,957 | 31,591,000 | 18,679,858 | 15,276,037 | 25,374,628 |
| ஏனைய வரு மானங்கள் | 66,224,500 | 91,570,343 | 67,246,462 | 34,097,341 | 73,701,900 | 115,931,070 | 337,320,029 | 9,773,460 |
| மொத்தம் | 156,662,026 | 185,903,627 | 153,367,687 | 203,511,871 | 179,483,558 | 199,817,432 | 401,123,676 | 170,975,931 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 60,689,595 தொகையாக காணப்பட்டதுடன் 34606 வீதவரி அலகுகள் தொடர்பாக ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 34,082,159 தொகையுடன் ரூபா 94,771,754 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 607 கடைறைகளில் 594 தொகை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் 433 வாடகையாளரிடம் ரூபா 22,556,363 இற்கான கடை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. நிலுவை மீதிகள் காணப்பட்ட கடையறைகளில் 330 கடையறைகள் தொடர்பாக ரூபா 25,000 தொகையை விட கூடிய நிலுவை மீதிகள் காணப்பட்டதுடன், அவை மொத்தக் கடையறை எண்ணிக்கையின் 76 சதவீதத்தைக் கொண்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 04 வர்த்தக தொடர் கட்டிடங்களைச் சேர்ந்த 30 கடையறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 6,752,755 தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மா நகர சபைக்குச் சொந்தமான 2 இடங்களில் காணப்படும் 56 கடையறைகள் எழுத்துமூல உடன்படிக்கை இன்றி வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | எழுத்துமூல உடன்படிக்கை அனுகி வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபைக்கு சொந்தமான 86 கடையறைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டு இருக்காததுடன், அவற்றின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் உடன்படிக்கையை நாளதுவரை ஆக்குவதில் தாமதமாக காணப்பட்ட காலவரையறை 01 மாதத்திற்கும் 21 வருடமும் 08 மாதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | 06 கடையறைகளின் உடன்படிக்கை தற்போது நாளது வரை ஆக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான கொட்டுவேகொட புதிய வர்த்தக தொடர்கட்டிடத்தில் 66 கடையறைகளில் 49 உம் மற்றும் கொட்டுவேகொட வர்த்தக தொடர் கட்டிடத்தின் 20 கடையறைகளும் வாடகைதாரர்களினால் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் மூடப்பட்டிருந்ததுடன், கொடுவேகொட புதிய வர்த்தக தொடர்கட்டிடத்தின் மூடப்பட்டிருந்த 49 கடையறைகளில் 35 கடையறைகள் தொடர்பான வாடகைதாரர்களுடன் வாடகை உடன்படிக்கைகளுக்கு அணுகி இருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அனைத்து உடன்படிக்கைகளும் நாளதுவரை ஆக்கப்பட்டு, உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (எ) | கொடுவேகொட பழைய வர்த்தக தொடர்கட்டிடத்தின் 14 வாடகை தாரர்கள் மற்றும் கொடுவேகொட புதிய வர்த்தக தொடர்கட்டிடத்தின் 13 வாடகைதாரர்கள் சபையின் அங்கீகாரம் இன்றி கடையறைகளை ஏனைய தரப்பினருக்கு துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஏ) | மாத்தறை மா நகர சபைக்கு சொந்தமான மாத்தறை வாடிவீடு முகாமைத்துவம் செய்து நடாத்திச் செல்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான உப கம்பனி ஒன்றான தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அந் நிறுவனத்தினால் உழைக்கும் முகாமைத்துவ கட்டணத்தின் மீது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 2019 ஒக்தோபர் முதல் 2022 ஒக்தோபர் வரையான காலப் பகுதி தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,152,266 இற்கான தொகை ஒன்றினை அறவீடு செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட உத்தியோகத்தர் மூலம் கோரிக்கைப் பத்திரம் அனுப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மாகாண சபையின் பிரதான செயலாளரினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 488,648 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 223,827,618 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | முன்கொண்டு வரப்பட்ட முத்திரைக் கட்டண மீதி தொடர்பாக பிரதான செயலாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஒ) | மா நகர சபை அதிகார பிரதேசத்தில் இலங்கை சுற்றுலா சபையினால் பதிவு செய்யப்பட்ட 30 ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் காணப்பட்ட போதிலும் அவற்றில் 22 ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | விரைவாக வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வண்டு வரை கட்டிட நிர்மாண வேலைகளுக்காக 3330 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 370 தொகைக்காக இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது. வீதவரி பெறுமதி மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்ட எண்ணிக்கை 312 தொகை காணப்பட்ட போதிலும் புதிய வீதவரி பெறுமதி மதிப்பீடுகள் 247 இற்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் படி வழங்கப்பட்டிருந்த கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் தொடர்பாக நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்கள் வழங்கியிருந்த கட்டிடங்களின் வீதவரி மதிப்பீட்டிற்காக விண்ணப்பித்த போதிலும், அந்த கட்டிடங்களை முழுமையாக நிர்மாணிக்கும் வரை பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வீதவரி மதிப்பீடு செய்தல் நிராகரிக்கப்படுகின்றது என. | வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 மிகை விதிப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது ரூபா 451,376 தொகைக்கான 03 மிகை விதிப்புக்கள் விதிக்கப்பட்டிருந்தது. | மேன்முறையீடுகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்று கிடைத்திருக்கவில்லை என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்ளல்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை மா நகர சபையில் நிறுவப்பட்டுள்ள தீ அணைப்பு அலகிற்கு நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் இன்மையினால் 2018 ஆண்டின் ஒக்தோபர் மாதம் முதல் தீ பாதுகாப்பு சான்றிதழ் வழங்குதல் இதுவரை இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன், அதன் காரணத்தினால் சபையின் அதிகார பிரதேச மக்களுக்கு தீ பாதுகாப்பு சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக காலி பிரதேசத்திற்கு செல்ல வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது தீ பாதுகாப்பு சான்றிதழ் வழங்குவதின் மூலம் ரூபா 250,000 இற்கான வருமானம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வருமானத்தையும் சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாபன அலுவல்கள் உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கொடவில குப்பை முகாமைத்துவ நிலையத்திற்கு சொந்தமான நிலப் பகுதியில் 5 ஏக்கர் பகுதி ஒன்று மற்றும் சேதனப் பசளை உற்பத்திற்காக பயன்படுத்தப்பட்டு வந்த கட்டிடத்தின் ஒரு பகுதி குப்பைகள் மூலம் மின்உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் குப்பை ஹலர் இயந்திரம் ஒன்று பயன்படுத்த முடியாமையினால் குப்பை அடுக்குகளை வைப்பதற்கு போதியளவு இடவசதி மற்றும் கொள்திறன் இன்மையினால் சேதனப் பசளை உற்பத்தி 2015 இல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் மீளாய்வாண்டு வரை சுமார் 88 சதவீதத்தினால் சராசரி குறைவடைந்திருந்தது. | செயற்படாதிருந்த ஹலர் இயந்திரமும் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது எனவும், குப்கைகளின் மூலம் மின் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமும் தற்காலிகமாக சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக முறையான மற்றும் நிரந்தரமான வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். |
| (இ) | கொடவில குப்பை முகாமைத்துவ நிலையத்திற்கு கொண்டு வரப்படும் மொத்த குப்பை எண்ணிக்கையும் போதியளவு சேதனப் பசளை உற்பத்தி | குப்பைகள் மூலம் மின் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த | குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக முறையான மற்றும் நிரந்தரமான வேலைத் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்திறன் ஒன்று பயன்டுத்தப்படாமையால் சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்படாமல் மீதியாக காணப்படும் குப்பைகள் சுமார் 08 வருட காலமாக திறந்த நிலப் பரப்பில் குவிக்கப்பட்டிருந்தமையால் பாரிய குப்பை மலை ஒன்று உருவாகியிருந்தது. | கட்டிடத்தை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மற்றும் மீள்சுழற்சி மேற்கொள்ள முடியாத உக்காத குப்பைகளை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதன் மூலம் குப்பை செயற்களத்தில் போடப்படும் குப்பையின் எண்ணிக்கையை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | உருவாக்கப்பட்டிருந்த பாரிய குப்பை மலையின் காரணமாக ஏற்பட்டிருந்த சுற்றாடல் சார் மற்றும் சுகாதாரம் சார் சிக்கல் நிலைமையினை கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால தீர்வொன்றென வாடகை அடிப்படையில் எக்ஸ்கவேடர் இயந்திரம் ஒன்றை பயன்படுத்தி மண்போடப்பட்டு குப்பைகளை மூடுவதற்காக 2014 ஆண்டு மே மாதம் முதல் மீளாய்வாண்டு இறுதி வரையான காலப் பகுதிக்காக ரூபா 41,114,025 இற்கான செலவொன்று சபைக்கு மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்ததுடன், மண்ணினால் மூடப்படட் குப்பை மலை மண் கழுவிச் செல்லப்பட்டமையால் மீண்டும் குப்பை மலை முன்னர் இருந்தவாறே திறக்கப்பட்ட நிலையில் காணப்பட்டமையால் அதற்காக மேற்கொள்ளப்படிருந்த தொகை பயனற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | குப்பை செயற்களத்திற்கு அனுப்பப்படுகின்ற குப்பைகள் நாளாந்தம் சமப்படுத்தப்பட்டு மண்ணினால் மூடப்படல் மூலம் மேலும் குப்பைகளை போடக் கூடிய விதமாக அந்த இடத்தை தயாரித்துக் கொள்வதற்காக வாடகை அடிப்படையில் எக்ஸ்கவேடர் இயந்திரம் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டது என. | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான மற்றும் நிரந்தர வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டிற்கு முன்னர் இருந்து 2020 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த புத்தகப் பெறுமதி ரூபா 2,412,000 தொகைக்கான 09 ட்ரைசிகல் மற்றும் புத்தகப் பெறுமதி ரூபா 428,000 தொகைக்கான 02 கை டிரக்டர்களை அப்புறப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரைவாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த வாகனங்களை விரைவாக அப்புறப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆண்டிற்கு முன்னர் இருந்து செயற்படாத நிலையில் காணப்பட்ட சபைக்கு சொந்தமான சாக்கடை வாகனத்தினை திருத்த வேலை | தொழிநுட்ப அறிக்கை ஒன்று பெற்றுக் கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டு ஓட்ட நிலைக்கு மாற்றுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | 2011 ஆண்டிற்கு முன்னர் இருந்து 2012 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 4,484,208 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2007 ஆண்டிற்கும் மற்றும் கடந்த ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பகுதியுள் தேவைப்பாட்டினை கவனத்தில் எடுக்காமல் கொள்வனவு செய்திருந்தமையால் பல்வேறு அளவிலான 189 டயர்கள் மற்றும் 30 டியூப்கள் 10 மாதத்திற்கும் 16 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியுள் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தேவைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 இலக்கங் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி xi ஏற்பாடுகளுக்கு புறம்பாக மற்றும் அரச செலவுகள் மிகவும் அத்தியவசியமான சேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தக் கூடிய வகையில் தீவிர கட்டுப்பாடு ஒன்றினை மேற்கொள்ள வேண்டிய காலகட்டத்தில் மாத்தறை மா நகர சபையினால் சில அச்சு படிவங்கள் போதியளவு களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அச்சு காகிதாகிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,312,850 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியுள் ஓடப்பட்ட கிலோமீற்றர்கள் எண்ணிக்கை/ இயந்திர மணித்தியால எண்ணிக்கையின் படி வழங்கப்பட வேண்டிய எரிபொருள் எண்ணிக்கையை இணக்கஞ் செய்த போது 11 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் 1,358.56 லீற்றர்கள் மிகையாகவும், 03 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் 864.42 லீற்றர் குறைவாகவும் வழங்கப்பட்டிருந்தது. | வாகனங்களின் எரிபொருள் சமநிலைப்படுத்தல் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2021 ஏப்ரல் 13 திகதி குப்பைகளை கொடவிலவிற்கு எடுத்துச் சென்று அப்புறப்படுத்திய பின்னர் மா நகர சபைக்கு திரும்பி வரும் போது டிப்பர் வண்டி பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கில் ஒன்றில் மற்றும் தனியார் பஸ் வண்டி ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன், விபத்து ஏற்பட்டு 1½ வருடங்களுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணையின் போது சாரதி பொறுப்புச் சொல்ல வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை வாகனத்தை திருத்த வேலை மேற்கொண்டு சேதத்தினை மீளளிப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்த வேலைகள் இது வரை பூர்த்தி செய்யப்படவில்லை என. | இழப்பீடு விரைவுபடுத்தப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை மா நகர சபை அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த ப்ரவுன்ஸ்ஹில் என்ற இடத்தில் இரண்டு தனிநபர்களினால் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் அங்கீகாரம் இன்றி 02 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு காணப்பட்டதுடன் இந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக 2010-2030 மாத்தறை நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தில் (பாகம் II) திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி பிரமாணங்களில் II ஆவது மற்றும் IV ஆவது அட்டவணைகளுக்கு இணங்க கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்தப்பட்ட வரைபு சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 48,450,204 தொகை செலவிடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வல்கம பொது வர்த்தக தொடர்கட்டிடம் பொதுச் சந்தை ஒன்றிற்கு பொருத்தமான வரைபொன்றின் படி நிர்மாணிக்கப்பட்டு இருக்காமையால் அந்த சந்தையின் 02 கடையறைகள், 05 தரை சதுரங்கள் மற்றும் மீன் பலகை 01 இனை பெற்றிருந்த வியாபாரிகளினால் வர்த்தக தொடர் கட்டிடத்திற்கு வெளியே பகுதி ஒன்றில் தற்காலிகமாக கொட்டில் ஒன்று | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சபையின் ஆதனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரித்து வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே போல் அந்த சந்தையின் 13 கடையறைகளில் 11 கடையறைகள் மற்றும் 08 தரை துண்டுகளில் 03 தரைத் துண்டுகள் வியாபாரிகளுக்கு வழங்கப்படாமல் மூடப்பட்டு காணப்பட்டது. | | |
| (இ) | 2016 மே 06 திகதி கையொப்பமிடப்பட்ட திருத்தப்பட்ட இரண்டாவது உடன்படிக்கையின் மூலம் மாத்தறை மா நகர சபைக்கு சொந்தமான கொடவிலவத்த காணியில் 05 ஏக்கர் தரைப் பகுதி 25 வருட காலப் பகுதிக்கான மின் உற்பத்தி செய்யும் செயற்திட்டம் ஒன்றை செயற்படுத்தும் தனியார் கம்பனி ஒன்றிற்கு தற்காலிகமாக அனுபவிப்பதற்காக வழங்கும் போது மாதாந்த குத்தகை பெறுமதி மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில் குத்தகை உடன்படிக்கைக்கு அணுகியிருக்கவில்லை. | செயற்திட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மீறல் தொடர்பாக குறிப்பிட்ட நிர்மாண வேலைக் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | ஆதனங்களை குத்தகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக 3330 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன் அவற்றில் 370 இற்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருந்தது. வீதவரி மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்ட எண்ணிக்கை 312 ஆக காணப்பட்ட போதிலும் 247 இற்கு மாத்திரம் புதிய வீதவரி மதிப்பீடுகள் வழங்கப்பட்டிருந்தது. அதன் படி வழங்கப்பட்டிருந்த கட்டிட அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வீதவரி அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள கட்டிடங்கள் வீதவரி மதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டிடங்கள் முழுமையாக நிர்மாணிக்கும் வரை பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளல் மறுக்கப்பட்டிருந்தது என. | வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 07/03/Rev/matara இலக்கங் கொண்ட மற்றும் 2001 மே 14 திகதிய கடிதத்தின் பிரகாரம் வர்த்தக தொடர் கட்டிடங்களுக்காக செலவிடப்பட்ட தொகையில் 35 சதவீதம் அதாவது ரூபா 37,871,539 இற்கான தொகை கடைகளை | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டென்டர் பண்ணி பெற்றுக் கொள்ளும் ஒரே தடவையில் பெறும் பணம் (Key money) ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மாத்தறை மா நகர சபையின் நகர முதல்வருக்கு மற்றும் அங்கத்தவர்களுக்கு சட்ட திட்டங்கள், தாபனக் கோவை நிதிப் பிரமாணங்கள் மற்றும் ஏனைய சுற்றறிக்கைள் தொடர்பான அறிவொன்றினை பெற்றுக் கொள்வதற்காக தகைமையுடைய பதவியணியொன்று காணப்பட்ட போதிலும் மேலதிக ஆலோசகர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2020 ஒக்தோபர் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 668,333 ஆலோசகர் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | ஆலோசகரின் கல்விச் சான்றிதழ் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் சேவைச் சான்றிதழ் கோவைப்படுத்தப்பட்டுள்ளது எனவும், மாநகர முதல்வரின் பதவியணியினர் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் வெளிச் செல்லலை உறுதிப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்படவில்லை எனவும் இந்த ஆலோசகர் ஒவ்வொரு மாதமும் நிறைவேற்றுகின்ற வேலைகள் தொடர்பாக அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என | தேவையான ஆலோசனைகள் நகர ஆணையாளரிடம் முறைப் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்திற்காக 2021 மார்ச் 03 திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபையினால் ஒரு தடவையில் 6600 லீற்றர்கள் வீதம் 25 சந்தர்ப்பங்களில் 165000 டீசல் லீற்றர்களுக்காக ரூபா 33,978,861 இற்கான தொகையொன்று செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 446,851 இற்கான மேலதிக போக்குவரத்துக் கட்டணம் ஒன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. எனினும், சபையினால் கழிவு ஒன்று பெற்றுக்கொள்வதற்கு மற்றும் இலவசமாக எரிபொருள் போக்குவரத்து பெற்றுக்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபத்திற்கு கோறிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது என. | கிரயம் குறையக்கூடியவாறு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 நவம்பர் 07 திகதிய 22/99 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 1:3:1 மற்றும் 2022 | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 40(1)(அ) (ஆ) மற்றம் (இ) பிரிவுகளின் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 26 திகதிய 03/2022 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 3(vii) பந்திகளின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாத்தறை மாநகர சபைக்கு சொந்தமான க்ரு கப் வண்டி தொகுதிப் போக்குவரத்திற்காக குறிப்பிட்ட 50 கிலோமீற்றரை மிகைத்து 27 கிலோமீற்றர்கள் நாளாந்தம் அலுவலகத்திற்கு வருவதற்கும் செல்வதற்கும் நகர பொறியியலாளருக்கு வழங்கப்பட்டு அதற்காக ஒப்பந்த அடிப்படையில் சாரதியொருவர் மீளாய்வாண்டு ஆகஸ்ட் 01 திகதி முதல் சேர்க்கப்பட்டிருந்தது. | மூலம் சாட்டப்பட்டிருந்த அதிகாரம் மற்றும் 03/2022 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் மூலம் தடை செய்யப்பட்டிருக்காமையால் தேவைப்பாட்டின் படி மேற்கூறிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதென. | |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கொட்டுவேகொட 56 கடையறைகளைக் கொண்ட வர்த்தக தொடர் கட்டிடத்திற்கு அண்மித்து தென் பகுதியில் அமைந்துள்ள 20.5 அடி x 22 அடி அளவிலான சபைக்குச் சொந்தமான வெற்றுக் காணியை எல்லை வேலிகள் அமைத்து மாநகர சபைக்கு சொந்தமான காணி என அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்பட்டிருக்காததுடன், இடது புறத்தில் அமைந்துள்ள காணியில் மாத்தறை மாநகர சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ஒரு நிறுவனத்தினால் 22 அடி நீளம் மற்றும் 11 அகலம் இன்டர்லாக் கற்கள் பரப்பி நுழைபாதை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | மீண்டும் நில அளவை மேற்கொண்டு எல்லை வேலி நிறுவுதல் மூலம் தீர்த்து, தனியார் பயன்படுத்தலை நிறுத்துவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.6 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை மாநகர சபை அதிகார பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 35 தொன்கள் குப்பையினை குப்பை முகாமைத்துவம் செய்வதற்காக நீண்ட கால தீர்வொன்று என குப்பையின் மூலம் மின்சார உற்பத்தி செய்யும் செயற்திட்டம் (Waste to Energy Project) மாத்தறை மாநகர சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஒரு தனியார் கம்பனி இடையே 2014 ஆகஸ்ட் 08 திகதி மேற்கொண்டிருந்த முத்தரப்பு உடன்படிக்கை மீது 2014 ஆகஸ்ட் 11 திகதி | செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த முற்தரப்பு உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியமைக்காக குறிப்பிட்ட கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதற்காக மாத்தறை மாநகர சபைக்கு சொந்தமான கொடவிலவத்தை எனும் காணியில் இருந்து 05 ஏக்கர் தரைப் பகுதியொன்று 25 வருட காலப் பகுதிக்காக வழங்கப்பட்டிருந்தது. கடந்த 08 வருட காலப் பகுதியினுள் 07 சந்தர்ப்பங்களில் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் அடிக்கடி நிறுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது.

### 3.7 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4:2:1, 4:2:2 மற்றும் 4:2:3 வழிகாட்டல்களுக்கு அமைவாக பெறுகைத் திட்டமொன்று மற்றும் விரிவான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையினால் மீண்டுவரும் மற்றும் மூலதன வேலைத் திட்டங்களின் கீழ் 165 பெறுகை கூட்டங்கள் நடாத்தப்பட்டு ரூபா 40,850,096 தொகை பெறுமதியான பெறுகை தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2006 வழிகாட்டல் கோவையின் 2:11:3 இணங்க கூட்ட அறிக்கைக் கோவையொன்று அல்லது புத்தகமொன்று தொடர் இலக்கம் போடப்பட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு பல்வேறு நிதியங்களின் கீழ் இரண்டு வடிகால் முறைமைகள் நிர்மாணிக்கும் போது பயன்படுத்தப்பட்டிருந்த கம்பிகளின் எண்ணிக்கையை விட 71.17 கிலோ கம்பிகளுக்காக ரூபா 23,356 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் போது பதப்படுத்தப்பட்ட பலகைகள் (Plywood) பயன்படுத்தப்பட்டு வடிகால்களை வடிவமைப்பதற்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ரேட் ஒன்று அறிமுகப்படுத்தியிருக்காததுடன், | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பொருத்தமான மற்றும் அனுகூலமான ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்காக பொருத்தமான ரேட் ஒன்றாக தென் மாகாண பொறியியல் அலுவலகத்தினால் Ct - 036 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரேட் இனை பயன்படுத்தாமல் ST - 057 மற்றும் ST - 112 பயன்படுத்தியிருந்தமையால் சபையினால் நிறைவேற்றப்பட்ட 03 கொங்கிரீட் வடிகால்களுக்காக வடிவமைப்பு தயாரிக்கும் போது ரூபா 290,728 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | கடந்த ஆண்டு கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கிராமியப் பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 785,349 இற்கான பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பெறுமதியுடன், துண்டுக் கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்திருந்த 02 பாதைகள் மிகவும் வரையறுக்கப்பட்ட நலன் பெறுவோர் தொகையொன்றினை இலக்காக கொண்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கூடிய நலன் பெறுவோர் தொகை ஒன்றிற்காக நலன் பெறக்கூடிய விதமாக செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | கிராமிய வீதிகள் மற்றும் மீதியான உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கிராமியப் பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபையின் அதிகார பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்டிருந்த 15 வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பாதை இரு மருங்கிலும் மரங்கள் நடும் வேலை விடயம் நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் அதற்காக ஒவ்வொரு நிரமாண வேலைக்காகவும், ரூபா 10,000 வீதம் ரூபா 150,000 தொகையொன்று நிர்மாண வேலை கொடுப்பனவு பில் பத்திரங்களில் உட்படுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செலுத்தப்பட்டிருக்காத 03 செயற்திட்டங்களின் பில் பத்திரங்களில் இருந்து பணத்தினை கழித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், மீதியான செயற்திட்டங்களில் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து கழித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | குறிப்பிட்ட தொலைபேசி கம்பனி ஒன்றினால் சபைக்கு சொந்தமான மெத்தவத்த எலியகந்த பிரவுன்ஸ் ஹில் இல் அமைந்துள்ள சரத் சேதர மாவத்தையில் கேபல் விரிப்பதற்காக உடைக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட கம்பனியில் இருந்து கடந்த ஆண்டு திசெம்பர் 20 திகதி ரூபா 3,081,668 தொகை சபையினால் அறவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் பாதையின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பாதையை தயார் செய்வதற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு நிதிக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், அங்கீகாரம் கிடைத்த பின்னர் பாதையின் திருத்த வேலை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனவும், | விரைவாக பாதையின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நேர் உழைப்பு அடிப்படையின் மீது செயற்படுத்தப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வு வெளிக்கள பரிசோதனையின் போது பெற்றிருந்த வேலைகளின் அளவைகளின் படி பயன்படுத்தப்பட வேண்டிய பண்டங்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு நிர்மாண வேலைகளுக்காக களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த பண்டங்களின் எண்ணிக்கையிடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, நேர் உழைப்பு அடிப்படையின் மீது செயற்படுத்தப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 334,880 தொகை பெறுமதியான பண்டங்கள் மிகையாக வழங்கப்பட்டிருந்தது. | பாதையில் காணப்பட்ட முறைசாரா தன்மை காரணமாக மூலப் பொருட்கள் மிகையாக செலவிடப்பட்டிருந்தது என. | முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்று பேணிச் செல்ல வேண்டும். |
| (எ) | 2021 ஆண்டில் சபை நிதியத்திலிருந்து செயற்படுத்தப்பட்டிருந்த இஸதீன் நகரின் சேவை இல்லத்தின் மீதிப் பகுதியை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையின் பெண் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் ரூபா 432,448 இற்கான பெறுமதியைக் கொண்ட முடிவுற்ற வேலை அறிக்கை தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த பில் பத்திரத்தில் வேலை விடய இலக்கம் 01 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மரம் பயன்படுத்தப்படாமல் சிவிலின் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மரச் சட்டகம் நிர்மாணிக்கப்பட்டு அதற்காக ரூபா 425,149 இற்கான தொகையொன்று கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டு ஒப்பந்த சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு போலி பில் பத்திரங்கள் பரிந்துரைக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தென் மாகாண பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) இனால் இந்த குற்றச்சாட்டு தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், விசாரணை உத்தியோகத்தர் வருகை தந்து சாட்சிகள் மற்றும் கூற்றுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன எனவும். | விரைவாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது வல்கம பொதுச் சந்தை கட்டிட நிர்மாண வேலைக்காக ரூபா 25,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த 250 சீமெந்து கற்கள் முறையான நியமங்களுடன் காணப்படாததுடன், ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையின் படி சீமெந்து கற்களின் வலு சராசரி சதுர மில்லிமீற்றர் ஒன்றிற்கு நிவுட்டன் 1.1 இற்கும் 1.3 இற்கும் இடைப்பட்டதாக இருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | முறையான நியமங்களுடன் செயற்திட்டங்கள் செயற்பட வேண்டும். |

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச்சென்றிருந்த 19 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 852,243 தொகைக்கான கடன் மீதிகள் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 10.2 இன் பிரகாரம் இடர் கடன் செலுத்துவதற்காக தகைமை பெறுவது நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரிமையுடைய உத்தியோகத்தர்கள் மாத்திரம் எனினும், மாத்தறை மாநகர சபையினால் அமைய மற்றும் பிரதியீட்டுத் தொழிலாளர்கள் 16 பேரிற்கு கூட்டுத்தொகை ரூபா 1,062,717 தொகைக்கான இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது. | இடர் கடன் பெற்றுக்கொள்ளும் போது கல்விச் சான்றிதழ்களில் சிக்கல் தன்மை காணப்பட்ட ஊழியர்களுக்கு சுமார் ரூபா 150,000 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது என. | தாபனக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |